<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

<u>அ.வ.எண்.152/2015</u>

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி. K. அம்பிகா, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி 1 வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2020 ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 28.01.2020**

**பெயர் - கன்னியம்மா**

**க/பெ - சீனிவாசன்**

**வயது -**

**சாட்சி - PW1**

**விசாரணை தொடங்கும் நேரம் -11.03am**

**<u>முதல் விசாரணை -</u>**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனது வாக்குமூலம் பிரமாணபத்திரம் மூலம் முதல் விசாரணை சாட்சியம் அளிக்கிறேன். எனது வழக்கிற்கு ஆதரவாக கீழ்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன். 21.3.1988 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வாசா ஆ 1 ஆகவும். அசல் ஆவணம் தாக்கல் செய்யாததால் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. 21.01.2013 தேதியிட்ட புகாரின் நகல் வாசா ஆ 2 ஆகவும். 21.01.2013 தேதியிட்ட அடையாள சீட்டின் அசல் வாசா ஆ 3 ஆகவும். 23.01.2013 தேதியிட்ட காவல் நிலைய சம்மன் வழக்கு சொத்திற்கு சம்மந்தம் இல்லா ஆவணம் என்ற ஆட்சேபனையுடன் வாசா ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 16.3.2014 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் நகல் வாசா ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

30.6.2015 தேதியிட்ட புகார் ஏற்ப்பு சான்றிதழின் அசல் வழக்கு சொத்திற்கு சம்மந்தம் இல்லா ஆவணம் என்ற ஆட்சேபனையுடன் வாசா ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**விசாரணை முடியும் நேரம் -11.08am**